# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 8
ஷவ்வால் பிறை 20
ஞாயிறு (24-9-1978)
திருவியது 1947
புத்தகம் 32
இதழ் 33

விலை சதம் 60


# தமிழ்ப்பாடசாலைகள் போர்க்களமாகும்!

## சிங்களத் திணிப்பு முயற்சியின் எதிரொலி!

தமிழ்ப்பாடசாலைகள் மொழிப்போராட்டக்களமாக மாறக்கூடிய சூழ்நிலையொன்று உருவாகிவருகிறது. இந்தச் சூழ்நிலையை கல்வியமைச்சு அண்மையில் தமிழ்ப்பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சிங்கள ஆசிரியர் நியமனம் பற்றிய சுற்றறிக்கையே தோற்றுவித்துள்ளது.

தமிழ்ப்பாடசாலைகளின் பெற்றோர் சங்கங்கள் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் நியமனத்தை நிராகரித்து வருவதாலும், சிங்களம் போதிப்பதற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துவருவதாலும், மாணவர்களிடமே நேரடியாக சிங்களம்படிப்பது பற்றி இப்போது கல்வியமைச்சு அபிப்பிராயம் கோரியுள்ளதாம். இதற்கான சுற்றறிக்கை தமிழ்ப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு, சிங்களம் படிப்பது குறித்து தமிழ் மாணவ மாணவியரின கையொப்பங்களைத் திரட்டித்தருமாறு பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் தன்மானக் குலக் கொழுந்துகளான தமிழ் மாணவ மாணவியர் சிங்களம் படிப்பதற்கு தமக்கு விருப்பமில்லை யென்று கூறி சிங்களத்துக்கு ஆதரவாக கையெழுத்துப போட மறுத்து வருகின்றனர். ஒரு சில பாடசாலைகளில், கல்விஅமைச்சு அதிகாரிகளின் கருணையை எதிர்பார்க்கும் சில சுயநல ஆசிரியர்கள், சிங்களம படிப்பதால் தமிழ் மாணவர்களுக்கு நன்மையைய தவிர, தீமையில்லையென்று கூறி மாணவர்களை மயக்கி கையொப்பம் வாங்கியுள்ளனர்.

இவ்வாறு மாணவிகள் சிலரிடம் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள ஒரு தொகுதியைச் சேர்ந்த ஆசிரியையொருத்தி கையொப்பம் வாங்கிவிட்டதை அறிந்த அங்குள்ள மாணவர்கள் குறிதத பாடசாலை முழுவதும் சிங்களத்துக்கு ஆதரவாக துரோகம் புரிய முற்பட்ட அந்த ஆசிரியைக்கு எதிராக பல சுலோகங்களை எழுதிவிட்டார்களாம்.

பெரும்பான்மை தமிழ் மாணவர்களின் எதிர்ப்பின மத்தியில் சிங்கள ஆசிரியர் தமிழ்ப்பாடசாலைகளில் நியமிக்கப்பட்டால், பாடசாலைகளே போர்க்களங்களாக மாறும் என்று மாணவர் தலைவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

# 'யாழ்ப்பாண அரசு'

## வரலாற்று நூல் வெளியீட்டு விழா

இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாகத்தைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் எஸ். பத்மநாதன் எழுதியுள்ள யாழ்ப்பாண அரசு (Kingdom of Jaffna) என்ற வரலாற்று நூலின் முதலாவது தொகுதியின் வெளியீட்டுவிழா 23-9-78 சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறுகிறது.

ஈழத் தமிழர்களுக்கென தனியான ஆட்சி இருக்கவில்லை; நாடு இருக்கவில்லை யென்ற வரலாற்றுத் திரிப்புக்கள் மலிந்துவிட்ட ஒரு காலகட்டத்தில் அப்படிப்பட்ட பொய்யர்களை வாயடைக்கச் செய்யவும், முறையான வரலாறு தமிழர்களுக்கு இல்லாத குறையைப் போக்கவும் தகுந்த தருணத்தில் டாக்டர் பத்மநாதனின் இந்த நூல் ஆங்கிலத்தில் வெளிவருகிறது.

கிறிஸ்துவுக்குப்பின் 1350 முதல் 1450வரையுள்ள ஈழத்தமிழர் வரலாற்றை இந்த முதலாவது தொகுதி எடுத்துவிளக்குகிறது. திரு. பத்மநாதன் தனது கலா

—8-ம் பக்கம் பார்க்க

# கல்வியமைச்சு கூட்டிய மாநாட்டில் தமிழ் புறக்கணிப்பு

## தமிழ்ப்பெற்றோர் முகத்தில் கரிப்பூச்சு

தமிழுக்கு தேசியமொழி அந்தஸ்து வழங்கியுள்ளதாக கூறப்படும் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்து ஒரு கிழமை முடிவதற்கு முன்பே கல்வியமைச்சு கூட்டிய மாநாடொன்றில் தமிழ் மொழி ஒதுக்கப் பட்டு முற்றாகப் புறக்கணிக்கப் பட்டுள்ளது.

சென்ற வாரம் (12.9.78) கல்வி அமைச்சினால் கூட்டப் பட்டிருந்த கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு பல தமிழ் பெற்றோர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. காரணம், அவர்களது பிள்ளைகள் உயர் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமையே. இக் கூட்டத்துக்கு தமிழில் மாத்திரம் சொற்ப அறிவுள்ள பல கிராமப்புறப் பெற்றோர்களும் வடக்கிலும் கிழக்கிலும இருந்துவந்திருந்தனர். பெரும்பான்மையோர் சிங்களச் சகோதரர்களே.

சரியாக 2மணிக்கு ரோயல் கல்லூரி (நவரங்கல) மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமாயிது. கல்விஅமைச்சருக்குப்

—8-ம் பக்கம் பார்க்க

# "தொண்டமான் அரசுடன் சேர்ந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி பலம் குன்ருது"

—தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. கருத்து!

"இந்தியவம்சாவளித் தமிழர்களின் தலைவரான திரு. தொண்டமான், ஜெயவர்த்தனவின் அழைப்பையேற்று அமைச்சரவையிற் சேர்ந்து கொண்டபோதிலும், இதன் காரணமாக பூர்வகுடித்தமிழர்களின் கட்சியான தமிழர் விடுதலை முன்னணி பலவீனப்பட நியாயமில்லை. அமைச்சர் தொண்டமானும் இனவுணர்ச்சிகாரணமாக பூர்வகுடித்தமிழருக்கு எதிராகச் செயற்பட மாட்டார் என்று நம்புகிறேன்."

—இவ்வாறு தமிழக சட்டமன்ற மேலவைத்தலைவரும் தமிழரசுக்கழகத் தலைவருமான சிலம்புச் செல்வர் ம. பொ. சி. திரு.தொண்டமான் அமைச்சர் பதவியேற்றது குறித்து கருத்து அறிவித்துள்ளார்.

# வீரமணி!

## ஈழம் வருகிருர்!

திராவிடக் கழகத்தின் இப்போதைய பொதுச் செயலாளரும், பெரியாரின் பிரதம தொண்டரும் விடுதலை இதழின் ஆசிரியருமான திரு. கி. வீரமணி 24-9-78 ஞாயிற்றுக்கிழமை சிங்கள சுறீலங்காவின் தலைநகராகிய கொழும்புக்கு வருகிருர்.

கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத்தின் அழைப்பை ஏற்று இங்கு வரும் திரு. வீரமணி கொழும்பு நிகழ்ச்சிக்குப் பின் தமிழ் ஈழத்துக்கும்—அதாவது யாழ்ப்பாணத்துக்கு—வந்து பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்.

சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கும் இளைஞரான திரு. கி. வீரமணி அவர்கள், அண்மையில் சென்னையில் நடைபெற்ற ஐந்தாவது இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. வீரமணி அவர்களை 35இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் சுதந்திரன் வரவேற்கிறது.

# நீதியமைச்சரை எதிர்த்துப்போட்டியிட்ட சம்பந்தமூர்த்திக்குப் பிடி ஆணை?

## காசி, மாவை மீது புதிய குற்றச்சாட்டு!



கவிஞர் காசிஆனந்தன், மாவை சேனாதிராசா, பொன். வேணுதாஸ் ஆகியோருட்பட பதினொரு இளைஞர்களுக்கும் எதிராகப் பொலிசாரால் சுமத்தப்பட்ட புதிய குற்றச்சாட்டின் பேரில் அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அதே சமயம் கல்குடாத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரும், சென்ற தேர்தலில் நீதியமைச்சர் திரு. தேவநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டவருமான திரு. சி. சம்பந்தமூர்த்தியின் பெயரும் இக் குற்றப் பத்திரிகையில் பொலிசாரால் புதிதாகச் சேர்க்கப்பட்டு, அவர் மீது பிடிவிருந்து உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

புதிய அரசியலமைப்பு பிரகடன வைபவ கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்குமாறு கோரும் கூட்டணியின துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தது கடைகளை மூடுமாறு வியாபாரிகளை நிர்ப்பந்தித்தது ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட 11இளைஞர்கள்6.9.78ல் மட்டக்களப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 15.9.78வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

—5-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேங்கடமைந்தன்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழகவரலாற்றில் குறிப்பிடப்படுகின்ற 'ஈழத்தடிகள்' என்பவர் யார்? அவர்பற்றிய விபரங்களைத் தயை செய்து கூறுவீர்களா?

ப: அவரது முழுப்பெயர் ஈழத்துச் சிவானந்த அடிகள். அவர் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வடலியடைப்பு எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். மிகச் சின்னவயதிலேயே தமது வீட்டாருடன் கோபித்துக் கொண்டு தமிழ் நாட்டுக்கு சென்றுவிட்டார். தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு 1938ம் ஆண்டு சிறை சென்றார். பேரறிஞர் அண்ணாவுக்கே உந்து சக்தியாக விளங்கியவர் நமது ஈழத்தடிகளே. அண்ணாவின் 'திராவிட நாடு' ஏட்டின் பொறுப்பாசிரியராக விளங்கி, அண்ணாவிடமிருந்து பல எழுத்தாவியங்களைக் 'கறந்தெடுத்து' தமிழ் மக்களுக்கு வழங்கியவர் அடிகளே. 1972ம் ஆண்டு தந்தை செல்வா, தலைவர் அமிர் ஆகியோருடன் தமிழ்நாடு சென்றிருந்தபோது காஞ்சிபுரத்தில் ஈழத்தடிகளைச் சந்தித்தேன். அப்போதே நோய்வாய்ப்பட்டிருந்தார். அண்ணா மறைந்த பின்னர் அடிகளாருக்கு ஆதரவு தருவார் யாருமில்லாமற்போய் விட்டனர். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அடிகளார் இறந்து விட்டார். அடிகளாரைப்பற்றி அண்ணா தனது தம்பிக்குகடிதத்தில் எப்போதும் குறிப்பிடத் தவறுவதில்லை!

* * *

இராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: கூட்டணியைக் குலைக்க முயலும் 'திடீர் காங்கிரஸ்'' பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! ஆட்டுவிக்கிறார் தார்மீகச் சாமியார்! சன்னதம் பிடித்து ஆடுகின்றன கிழடு தட்டிப்போனதுகளும், அறளைபெயர்ந்ததுகளும், வாலறுந்த நரிகளும்!

கே: ஜே. ஆர். ஒரு பெரிய இராசதந்திரி என்பதை ஏற்றுக்கொள்வீர்களா?

ப: ஆமாம், விடுதலைகோரும் ஒரு இனத்தை எப்படி அழிக்கவேண்டுமென்ற அந்தச் சாணக்கியம் தெரிந்தவர்தான் ஜே. ஆர். என் பதில் தடையில்லை; தமிழர்களை ஈழத்தமிழர், இந்தியத் தமிழர் என்று பிளவுபடுத்த தொண்டமானுக்கு ஒரு மந்திரி பதவி; ஒன்றுபட்ட தமிழ்ஈழத்தவர்களைப்பிளவுபடுத்த ஒரு 'திடீர் காங்கிரஸ்''; தமிழர்களை சாதியடிப்படையில் தனி அரசியற் கட்சி; யாழ்ப்பாணம் வேறு, மட்டக்களப்பு வேறு; என்று பிரசாரம் செய்ய கிழக்கில் ஒரு தேவநாயகம்- இதெல்லாம் ஜே. ஆரைத் தவிர வேறு யாருடைய மூளையில் உதயமாக முடியும் என்று நினைக்கிறீர்கள்?

* * *

கே. சுப்பிரமணியம்,
கொழும்பு-12.

கே: தமிழ்ஈழப் போராட்டம் சாத்வீகமானதா அல்லது பலாத்காரமானதா என்பதை கூட்டணியினர் இதுவரை தெளிவாகக்கூறவில்லையென்று கவலைப்பட்டிருக்கிறதே அரசியலில் பட்டுப் போனமரம் ஒன்று, அதற்கு உங்கள் பதில் என்ன?

ப: ''நாய்க்கேன் போர்த் தேங்காய்ஆராய்ச்சி'' என்ற பழமொழியே எனது பதில்!

* * *

க. கந்தசாமி,
யாழ்ப்பாணம்.

கே: அரசுக்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு சுயாட்சிக்கழகத்திற்குதமிழ் மக்கள் ஒத்துழைப்புத்தர வேண்டுமென்று கோரியிருக்கிறாரே திரு. வி. நவரத்தினம்?

ப: நல்லதாக யார் எதைச் செய்தாலும் தமிழ் மக்கள் அதை ஆதரிப்பார்கள்; திரு. நவரத்தினம் போராட்டம் நடத்தக்கூடாது என்று அவரது கையை யாரும் இதுவரை கட்டிப்போடவில்லையே! விரைவில்போராட்ட அறிவிப்பு வரும்; திரு நவரத்தினம் முன்னணியில் நின்று சிறை செல்வார் என்று எதிர்பார்ப்போம்!

கே: அரசியல் சாசனத்திற்கு சத்தியப்பிரமாணம் செய்யும் கூட்டணியினர், அதனை எதிர்ப்பதில் அர்த்தமில்லையென்று கூறுகிறார் திரு. வி. நவரத்தினம்—உங்கள் பதில் என்ன?

ப: சட்டத்தரணி திரு. வி. நவரத்தினம், நீதிமன்றத்தில் அரசியல் சாசனத்துக்கு காலையில் விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் எடுத்துவிட்டு மாலையில் அதே அரசியலமைப்பை எதிர்த்து நடைபெறும் சுயாட்சிக்கழகக் கூட்டத்தில் பேசுவதில்மட்டும் அர்த்தம் உண்டோ? அதுமட்டுமல்ல — திரு. நவரத்தினம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, சோல்பரி ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு சத்தியப்பிரமாணம் செய்து விட்டுத் தான், வெளியே அதை எதிர்ப்பதாக கூறினார்—அதிலே மட்டும் அர்த்தம் உண்டா?

* * *

குரிபிள்ளை,
தம்பலகாமம்.

கே: கவிஞர்காசிஆனந்தனைவிட தமிழ் ஈழத்தில் வேறு சிறந்த கவிஞர்கள் உண்டா?

ப: கவிஞர்கள் பலர் இருக்கலாம்; ஆனால்கவிதையில்தாம் எழுதுவதை நடைமுறையிலும் கடைப்பிடிக்கும் ஒரே கவிஞர் காசி ஆனந்தனே!

* * *

ந. தி. ராஜன்,
கல்முனை.

கே: இந்தியப்பத்திரிகைகளுக்கு இலங்கைத்தமிழர்களின் வரலாறுபற்றியும், அரசியல் நிலைபற்றியும் சிறிது படிப்பித்தால் நல்லதல்லவா?

ப: நிச்சயமாக! நமது தமிழர் விடுதலைக்கூட்டணியிலுள்ள ஒரு பெருங்குறை, திட்டமிட்டு சரியான பிரசாரத்தை நடத்தாமையே. இதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு வெளிநாட்டுப் பத்திரிகைத் தொடர்பு வேலையை சிறப்பாகவும், துரிதமாகவும், பக்குவமாகவும் செய்ய வேண்டும்—

முருகையா,
தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

கே: மக்கள் விடுதலை முன்னணி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முழு ஆதரவையும் தரத்தயார் என்று கூறியிருக்கிறதே— இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப, தமிழ் ஈழம் அமைக்கும் முயற்சியை தமது கட்சி எதிர்க்குமென்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜயவீரா திட்டவட்டமாக அறிவித்து விட்டாரே—இதன் பின்னரும் என் கருத்துவேண்டுமா? சிங்களவர்களின் வாக்குப்பலத்தை நம்பி ஆட்சிக்கதிரையைப் பிடிக்க எண்ணும் எந்தச் சிங்களக் கட்சியும் தமிழர்களின் விடுதலையை ஆதரிக்காது! அப்படி ஆதரித்தால், சிங்களவர்களின் வாக்குகள் தமக்கு கிடைக்காதென்பது அக்கட்சிகளுக்குத் தெரியும்! எனவே எந்த ஒரு சிங்களக் கட்சியையும் தமிழன் இனியும் நம்பி ஏமாறக் கூடாது.

* * *

இ. கே. இப்ருகிம்,
சாய்ந்தமருது,
2ம் குறிச்சி,
கல்முனை.

கே: நாங்கள் காந்திய வழியில் நின்று தனிநாடு பெறமுடியாவிடில் இரத்தம் சிந்தியாவது தனிநாடுபெற எங்களுக்கு ஏதாவது ஒரு வல்லரசு நாடு உதவி செய்யுமா?

ப: நாம் நமது தமிழ்ஈழ நாட்டை மீட்பதில் எவ்வளவுக்கெவ்வளவு எம்மைஅர்ப்பணிக்கிறோமோ — எவ்வளவுக்கெவ்வளவு அதிலே நிலை தளம்பாது உறுதியுடன் செயற்படுகிறோமோ — அவ்வளவுக்கவ்வளவு நம்மீது வெளிநாடுகளுக்கு ஒருமதிப்பும் நம்பிக்கையும்அனுதாபமும் ஏற்படும்! அந்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், வங்கதேசத்துக்கு இந்திய நாடு உதவியதுபோல்— பிலிப்பைன்ஸ் முஸ்லிம்களுக்கு லிபியா உதவியதுபோல்— நமக்கும் உதவி செய்யக்கூடிய நண்பர்கள் வருவார்கள். எதற்கும் முதலில் நமக்கு வேண்டியது நமது இலட்சியத்தில் அழுத்தமான உறுதியும், தியாகமுமே!

* * *

செல்வன், இ. இரத்தினதாசன்,
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி,
தமிழ்ஈழம்.

கே: கடந்த 30 வருடங்களாக கூட்டணியில் உள்ளவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் லாபம் தேடுவதாக கூறும் எனது நண்பருக்கு உங்கள் பதில் என்ன?

ப: உமது நண்பரைப் போன்றவர்கள் இல்லாத காரணத்தால்தான் முப்பது வருடமல்ல — முன்னூறு வருடங்களுக்குப் போராடி அயர்லாந்து சுதந்திரம் பெற்றது; அலுக்காமல், களைக்காமல் 300 ஆண்டுக் காலம் அயரிஷ் விடுதலை இயக்கத்தலைவர்களின் பின்னால் அயர்லாந்துமக்கள் சென்றதால்தான் அயர்லாந்து விடுதலையடைந்தது; இங்கு 30 ஆண்டுகளுக்கிடையில் முணு முணுக்கத் தொடங்கிவிட்டால், நாம் சுதந்திரத்துக்கே லாயக்கற்றவர்கள் என்பதே அர்த்தம்!

கே: இன்றையநிலையைப் பார்க்கும்போது உமக்கு என்ன தோன்றுகிறது குயுக்தியாரே!

ப: சுதந்திரத்தமிழ் ஈழம் தோன்றுவது நிச்சயம் என்பது தெரிகிறது!

# "தென்னுபிரிக்கா பற்றிக் கவலைபபடும் தென்னிந்திய செய்திப் பத்திரிகைகள் ஈழத் தமிழர் பிரச்சினை மீது அக்கறைகாட்டுவதில்லையே"

## சந்திரகாசன் தெரிவித்த கவலை!

"நண்பர் அமிர்தலிங்கம், மற்றொரு நண்பரை அறிமுகப்படுத்தி, இவரும் உங்களோடுதான் வருகிறார். ''இவரைத் தெரிந்து கொள்வது நல்லது. இவர் நமது பெருந்தலைவர் செல்வநாயகத்தின்புதல்வர் சந்திரஹாசன்'' என்றுவிளக்கினார்.

தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பண்புகளோடு அளவற்ற துடிப்பும் உற்சாகமும், அதே சமயம் நிதானமும்கொண்ட சந்திரஹாசன், விமானப் பிரயாணத்தின்போது, அந்த ஐம்பது நிமிடம் நான் தெரிந்து கொள்ளவேண்டிய பலசெய்திகளையும் சொன்னார்.

கடந்த ஆகஸ்டில் நிகழ்ந்த பயங்கரச்சம்பவங்களுக்குப் பிறகு இலங்கை வாழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் எரிந்துகொண்டிருக்கும் வேதனையைப் பற்றிச்சொன்னார். 1958ல் நிகழ்ந்த சம்பவங்களைவிட 1977 சம்பவங்களில் தமிழர்கள் உயிர்ச் சேதமும், பொருள் இழப்பும் பல மடங்கு அதிகம் என்று தெரிகிறது. இதையெல்லாம் விவரித்துவிட்டு சந்திரஹாசன் ''எங்கள் பரிதாப நிலையை பிரிட்டன், முதலிய அந்நிய நாடுகள் உணர்ந்தும் அனுதாபம் காட்டும் அளவில் ஒரு சிறு துளியாவது அண்டை நாடாகிய இந்தியா காண்பிக்கவில்லையென்பதுதான் வியப்பாயிருக்கிறது'' என்றுமுடித்தார்.

1958ல் கொழும்புவெள்ளவத்தைப் பகுதியில் நான் குடியிருந்த சமயத்தில் நிகழ்ந்த இனக்கலவரச் சம்பவத்தில் தமிழ்க் குடும்பங்கள் பட்ட அவதியை நானே நேரில்கண்டு அனுபவித்திருக்கிறேன். ஆனால் அந்தச் சம்பவங்களில் மலைநாட்டுத் தோட்டப் பகுதியில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. 1977 ஆகஸ்டில் சிங்களவர் அதிகமாக வாழும் பிரதேசங்களில் தொழில் பார்த்த தமிழர்களும், மலைநாட்டிலுள்ள தமிழர்களும் மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டு அவர்கள் உடைமைகள் முழுவதும் பறிபோய் விட்ட பரிதாபக் கதைதான் இன்று தமிழர் உள்ளங்களில் கசப்பை உண்டு பண்ணி வைத்திருக்கிறது.

நண்பர் சந்திரஹாசன் பேசியதிலிருந்துஓர்உண்மை தெரிய வந்தது. அக்கம் பக்கத்தில் இருக்கும் நமது இருநாடுகளுக்குமிடையே செய்திப் பரிவர்த்தனை மிக மிகக் குறைவு. இந்தியாவில் வெளிவரும் பத்திரிகைகள்— தமிழ் நாட்டுப் பத்திரிகைகளும் வடநாட்டுப் பத்திரிகைகளும்— இலங்கைச் சம்பவங்கள் பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பது மிகவும் குறைவு. இலங்கையிலுள்ள இந்திய செய்தி ஸ்தாபனங்கள் அவ்வளவாக அக்கறை காண்பதில்லை என்றார் சந்திரஹாசன்.

''தமிழ் நாட்டிலிருந்து ஆங்கில, தமிழ் தினசரிப் பத்திரிகைகள் இலங்கைக்குத் தினந்தோறும்விமானத்தில் வருகின்றன. இந்தியச் செய்திகளை நாங்கள் ஆவலோடு படிக்கிறோம். அதே சமயத்தில் எங்கள் நிலைமை

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்புமொழி என்ற உருவத்தில் தமிழ்ப்பாடசாலைகளில்

# நுழைய முனைகிறது சிங்களம்!

## என்றைக்கும் நமக்குச் சிங்களம் வேண்டாம்!
## செந்தமிழ் மரபு சிதைந்திட வேண்டாம்!

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி தமிழ் வளர்த்தது தங்கத் தமிழினம். அத்தகைய தமிழினத்தின் ஒரேயொரு உயிர் மொழி தமிழ் மொழி. இது தமிழனுகப் பிறந்த ஒவ்வொரு தமிழ் மகனும் நாளும் பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டியதொன்று, சில அற்ப சலுகைகளுக்காக எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு பாரம்பரியம் போன்றவற்றை விலைகூறி விற்பதுபோல் கேடுகெட்ட செயல் வேறெதுவும் இல்லையென்றே கூறவேண்டும்.

இதை நான் எதற்காகக்கூறுகின்றேனென்ருல் புதிய தவணை ஆரம்பமாகிய 28-8-78 முதல் சகல பாடசாலைகளிலும் சிங்கள மொழியைத் தொடர்பு மொழியாகக் கற்பதற்கு விரும்பும் தமிழ் மாணவர் தொகையை அறிவதற்காக ஓர் அட்டவணைப் படிவம் சகல பாடசாலை அதிபர்களுக்கும்அனுப்பப்பட்டு, அதனை அவர்கள் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிடமும் சென்று அம்மாணவர்களின் சம்மதத்தை அந்த அட்டவணையிற் பதிந்து, அதன் மூலம் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பி சிங்களத்தைக் கற்பிக்கத்திட்டம் தீட்டப்பட்டு வருகின்றது.

### சிங்களத்தை நிராகரியுங்கள்

இலங்கையில் உள்ள சகல தன்மானம் மிக்க மாணவர்களுக்கும் நான் கூறுவது என்னவென்ருல் சிங்களத்தை அதாவது ஒரு மொழியைக்கற்கவேண்டாம்என்று நான் கூறவில்லை. நிச்சயமாக ஒரு மொழியைக்கற்று அறிந்து வைத்திருப்பது தவறல்ல. நாம் இன்று இருக்கும் நிலையை சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். தமிழும் சிங்களமும் தேசிய மொழி என்ற ரீதியில் வாய்மொழியில் அல்லது செயல்முறையில் நடாத்தப்படுமாயின் நாம் சிங்கள மொழியைக்கற்பதிற் தவறு இல்லை. ஆனல் நாம் இன்று ஆளப்படும் இனமாக, அடிமையாக சிங்கள ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வருகின்ருேம். இந்த நிலையில் சிங்கள ஆசிரியர்களைப் பாடசாலைகளில் அதாவது தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிக்க அனுமதியளிப்பதால் ஏற்படப்போகும் பின்விளைவுகளை எமது தலைவர்களே பல முறை கூறியிருக்கின்ருர்கள்.

### அடிமை மனப்பான்மை

என்னருமைத் தமிழ்த் தாய் தந்தையரே உங்கள் பிள்ளைகளைச் சிங்களம் படிக்க விருப்பமா என்று கேட்டவுடன் அவர்கள் சில வேளைகளில் ஆம் என்று தான் கூறுவார்கள். ஏன் என்று கேட்பீர்கள்; அவர்கள் நினைப்பார்கள் சிங்களத்தை நாம் படித்தால் இப்போது தமிழுடன் ஆங்கிலத்தைக் கலந்து நாகரிகமாகப் பேசுகின்ருேமே அதேபோன்று சிங்களத்தையும் கலந்துபேசலாம் என்ற அடிமை மனப்பான்மையேயாகும்.

அவர்களுக்கு இதனைப் பாடசாலைகளிற் கற்பிக்க வைப்பதால் ஏற்படப் போகும் பின் விளைவு என்ன என்பதை அவர்கள் உணரமாட்டார்கள். ஏன் உணரக் கூடிய சிலரும் கூட சம்மதம் தெரிவித்திருப்பதாக அறிகின்ருேம். அவர்கள் அற்ப ஆசை கொண்டசுயநலவாதிகள் என்றே கருதுகின்ருேம்.

மாணவத் தோழர்களே இத்தகையோரை காறியுமிழுங்கள், சிங்களத்தை தமிழ்ப் பாடசாலைகலிற் கற்பிக்க விடுவதால் எதிர்காலத்தில் உங்கள் இளம் சிருர்களின் நிலைமை என்ன என்பதை சிந்தித்துப் பார்த்தீர்களா? இதனை முளையிற் கிள்ளி எறிவது மாணவ சமுதாயத்தின் முதற் கடமை.

### தமிழ் அழியும்

நீங்கள் பாடசாலைகளிற் சிங்களத்தைக் கற்று அதன் பயனுக சிங்கள மொழியில் தமிழ் மாணவர்கள் திறமையான பாண்டித்தியம்பெற்ற பின்னர் தமிழ் மொழிஎன்று ஒன்று இலங்கையில் இருக்கவில்லையென்றநிலை உருவாகும் எனவே மாணவ சமுதாயமே இத்தகைய கூற்றுக்கு இடமளிக்காது எதிர்ப்புத் தெரிவியுங்கள்.

இதுமட்டுமா இன்னும்சில காலம் செல்ல தமிழ் மக்கள் சமாதான மதமாகபெளத்த மதத்தைப் படிக்க வேண்டும் என்றும் அதற்கான அட்டவணையைத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பி மாணவர்களின் சம்மதத்தைக் கேட்டு அதைப் பாடசாலையிற் கற்பிக்கும் போது, காலகதியில் இலங்கை தற்போதைய சிங்கள ஆட்சியாளர்களில் சிலராற்கூறப்படுவது போன்ற முழுமையான சிங்கள பெளத்த நாடாக மாற வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தமிழ் மாணவ மாணவிகளே உங்கள் பாடசாலைகளில் சிங்களத்தைக் கற்பிக்கும் திட்டத்திற்கு இம்மியளவும் இடம் கொடாதீர்கள்.

ஈழத்தமிழ் இனமே நீ எமக்கு முற்பட்ட கால வரலாற்றைச் சற்று புரட்டிப் பார். என்ன நடைபெற்றிருக்கின்றது என்பதைச் சிந்தித்துப்பார், முன்னர் இந்தியாவில் சோழ இராச்சியம் வடக்கே விஜய நகரம் பேரரசையும், தெற்கேஈழத்தையும், கிழக்கே கிழக்கிந்தியத் தீவுகளையும், மேற்கே வேங்கடத்தையும் எல்லைகளாகக் கொண்டு பெரும் சாம்ராச்சியமாக விளங்கியது மட்டுமன்றி தமிழ் மொழியும், இந்து சமயமும் உன்னத நிலையில் இருந்தது.

### இணைப்பு மொழி இனம் அழிக்கும்

அத்தகைய ஓர் பெரும் இராச்சியமாக இருந்த சோழப் பேரரசு கிழக்கிந்தியத் தீவுகளில் யாவா, மாலாயா, சீயம், காம்போஜ பாலித்தீவு, பூனன்செல்லா சம்பா, போர்ணியோ, பிலிப்பைன் தீவுகள், சுமத்திரா, தாய்லாந்து, ஆகிய நாடுகளில் பரவி அங்கெல்லாம் தமிழ் மக்களும் இந்துசமயமும் மிகஉன்னத நிலையில் இருந்தது. ஆனல் இன்றுஒரு சிலதீவுகளைத் தவிர வேறு எந்தஇடத்திலும் தமிழ் மொழிதனியாகப் பேசும் மக்களை அதிகம் காணமுடியாதுள்ளது. இதற்கு காரணம் என்ன? என்றுகேட்பீர்கள்.

தற்போது எமது ஈழத்திற் கொண்டுவரும் இணைப்பு மொழித் திட்டத்தினலேயே ஆகும். இன்று அந்நாடுகளில் இருந்த தமிழ்மக்கள்வேற்று மொழியையும் வேற்றுமதத்தையும் கைக்கொண்டு வருகின்றனர். முன்னர்உன்னத நிலையில் இருந்த அதே தமிழ்ப் பரம்பரையே இந்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழ் இனமேஇந்நாட்டிலும் தமிழினம் வாழவில்லை என்று பின்னெருகாலத்தில் கூறவைப்பதற்கு நீ விரும்புகின்ருயா?. இல்லை அப்படி நீ விரும்பமாட்டாய். முக்கியமாக தமிழ் மாணவர்கள் ஒவ்வொருவரும் எமது தமிழர் கூட்டணிச் செயலதிபர்களுக்கு இதுபற்றி எழுதுங்கள், அவர்கள் இதனை முறியடிக்க வழி செய்வார்கள். ஒழிக தொடர்பு மொழி! வளர்க தமிழ்மொழி!

மாணவர் பேரவை
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# எந்த உருவில் வந்தாலும் சிங்களத்தை எதிர்ப்போம்!



தமிழ் மாணவர்கள் விரும்பினல்மட்டும் சிங்களம் படிக்கலாம்; அது இஷ்டபாடம்தான் என்று சொல்லி தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களைத் திணிக்க எத்தனிக்கிருர்கள். பின்னர் இஷ்ட பாடம், கட்டாய பாடமாக்கப்படும். காலக்கிரமத்தில் தமிழ் மாணவர்களுக்கும் சிங்களம் தான் போதனுமொழிஎன்பார்கள்,

திட்டமிட்டு எடுக்கப்படும் இச்சதி நடவடிக்கையை எந்த உருவில் வந்தாலும் நாம் அனுமதிக்க மாட்டோம். இது நமது இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை. இதனை எதிர்த்து எத்தகைய போராட்டத்தை நடாத்தவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

கல்வியமைச்சர், தனது வடக்கு, கிழக்கு விஜயத்தின்போது, விரும்பிக்கேட்கும் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர் கட்டாயம் அனுப்பப்படுவர் என்று சொன்னது எனக்குப் பெரும் அதிர்ச்சியை கொடுத்தது.

அதுமட்டுமன்றி சுய நலம் விரும்பும் சில தமிழ்ப் பிரமுகர்களும் இதற்கு உடந்தையாக ஒலமிடுவதைப் பார்க்க எனக்கு வேதனையாக இருக்கிறது. தனித்தன்மைநிறைந்த தமிழினத்தைக் காட்டிக் கொடுக்காதீர்கள் என்றுமட்டும் இவர்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெற்ருேர், மாணவர், விரும்பும் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவர் என்று சொல்கிருர்கள். எத்தனை பெற்ருேர் சங்கங்கள் விரும்பிக்கேட்கின்றன? எண்ணிப்பார்த்தால் இரண்டோ மூன்றுதான்! இதற்காகத் தமிழினத்தையே அழிப்பதா?

சிலாபம், புத்தளம், நீர்கொழும்பில் வாழ்ந்த தமிழ்மக்களுக்கு இவ்வாறுதான் ஆரம்பத்தில் சிங்களம் திணிக்கப்பட்டது. இதனல் இப்பகுதித் தமிழ் மக்கள் இன்று சிங்களவர்களாகவே மாறிவிட்டார்கள். வடக்கு, கிழக்கு, மாகாணங்களையும், நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்றுமாற்றி தமிழினத்தையே அழிப்பதற்கு எடுக்கப்படும் ஒரு சூழ்ச்சி நடவடிக்கையே இது. தமிழினத்தின் மரபைக்காக்கவும், எதிர்கால நலனைப் பேணவும் துடிக்கும் எந்த ஒரு தமிழனும் சிங்கள ஆசிரியர் நியமனத்தை, எக்காலத்திலும் விரும்பியோ விரும்பாமலோ ஏற்கக்கூடாது.

உத்தியோகம் பெறவிரும்பும் தமிழ் மாணவர்கள் ஏன் பாடசாலைக்கல்வியிலிருந்தே சிங்களம்படிக்கக்கூடாது; இதனை ஏன் எங்கள் இயக்கம் எதிர்க்கின்றது; இதனல் உத்தியோகம் பெற்று மூன்று வருடத்துக்குள் தமிழ் வாலிபர்கள் சிங்களம் சித்தியடைய கஷ்டமடைகின்றனர் என்றெல்லாம் சிலர் கூறிவருகின்றனர்.

எத்தனை வீதமான தமிழர்கள் அரசாங்கசேவையிலிருக்கிருர்கள்? பத்து வீதத்துக்கும் குறைவுதான். பத்து வீதமான தமிழர்கள் உத்தியோகம் பெறுவதற்காக முழுத் தமிழர்களுக்குமே பாடசாலைகளில் சிங்களத்தைப் புகுத்தமுடியுமா? இதை நாம் எப்படி ஆதரிப்பது?

என்ன காரணம் காட்டி, எந்த உருவத்தில் சிங்கள ஆசிரியர்களை தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்தாலும், அதை நாம் பகிஷ்கரிப்பதோடு எதிர்த்துப் போராடியே தீருவோம்!

—மூதறிஞர் தந்தை செல்வா (29-10-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநாயகத்துக்கு பகிரங்க மடல் (1)

# குமாரசூரியரும் ராஜனும் அருளம்பலமும் இன்று எங்கே?

## அவர்கள் ஆடிய ஆட்டமென்ன? அன்று பேசியவார்த்தையென்ன?

கல்குடாத் தொகுதியின் ''ஐநூறு வாக்குகள் புகழ்'' நீதியமைச்சர் திரு. தேவநாயகம் அவர்களுக்கு—

வணக்கம், புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததும் அவசரம் அவசரமாக புதிய சுற்றறிக்கையொன்றை நீங்கள் அனுப்பி வைத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகண்டேன். அதாவது தமிழ் வழங்கும் திருகோணமலை, வவுனியா, பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் சிங்களத்தையும் கட்டாயமாக பதிவு மொழியாகவும், நீதிமன்ற மொழி ாகவும்பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவு அனுப்பியுள்ளீர்களாம். என்ன செய்வது? ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே என்று அப்பரடிகளே கூறியிருக்கிருரே! ஆட்டுவிப்பவர் தாளத்துக்கு எல்லாம் ஆட வேண்டிய நிலைதானே இன்று அமைச்சர்களுக்கு வந்திருக்கிறது? ஆட்டுவிப்பவர் (ஜே)யாரென்பதை நான் சுட்டிக் காட்டத்தேவையில்லை!

இவன்வகுப்புவாதம் பேசுகிருன்; வவுனியாவிலும் திருமலையிலும் வாழும் சிங்களவர்கள் அவர்களது மொழியில் கருமமாற்ற வேண்டாமா? அதற்காகத்தானே சிங்களத்தையும் நீதிமன்ற மொழியாக்கியுள்ளேன்; இதிலே தவறு என்ன என்பீர்கள்! தென்னிலங்கையிலும், கொழும்பிலும் தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்களிலுள்ள சகலநீதிமன்றங்களுக்கும் தமிழையும் கட்டாயமாகப்பயன் படுத்திட வேண்டுமென்று கட்டளை அனுப்பியிருந்திருப்பீர்களாயின் உங்கள் செயலில் நியாயம் )ருக்கும், தமிழுக்கு அந்த உரிமை இல்லை; தமிழ் பிரதேசத்தில் மட்டும் சிங்களத்திணிப்பு — இதுதான் உங்கள் அரசியலமைப்பு தமிழர்களுக்கு தந்திருக்கிற உரிமை போலும்! இதுதான் பாரபட்சமற்ற தன்மை போலும்!

போனல் போகட்டுமென்று உங்களோடு சேர்ந்திருக்கும் தொண்டமானுக்க இரங்கியாவது நுவரெலியா, கண்டி மாவட்ட நீதிமன்றங்களிலும் தமிழை கட்டாய நீதிமன்ற மொழியாக்குவீர்களா? — திருகோணமலையிலும், வவுனியாவிலும் சிங்களத்துக்கு முடிசூட்டியுள்ளது போல! உங்களால் அப்படிச் செய்ய முடியாது; காரணம் நாடு முழுவதற்கும் அரசியலமைப்புப்படி சிங்களமே—சிங்களம் மட்டுமே நீதிமன்ற மொழி! இதுதான் தமிழ் மக்களுக்கு நீங்கள் மொழி உரிமை வழங்கியுள்ள இலட்சணம்!

அதுபோகட்டும்— தமிழர் விடுதலைக்கூட்டணியைத் தாக்கி மன்னரில் நீங்கள் பேசியிருந்த ஒரு பேச்சை வீரகேசரி 13-9-78 இதழில் படித்தேன். அதில் உங்கள் பேச்சில் இழையோடிய ஆத்திரத்தையும், கொதிப்பையும் என்னல்புரிந்துகொள்ள முடிந்தது.

புதிய அரசியலமைப்பு வந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடப் போகிறது; அதற்குப்பின் கூட்டணி குலைந்து விடும்; கூட்டணியின் சாயம் வெளுத்துவிடும் என்றெல்லாம்மேடைக்குமேடை பிதற்றி வந்தீர்கள்! கூட்டணிக்கு சவாலுக்குமேல் சவால் விட்டு வந்தீர்கள்! மட்டக்களப்பில் ஏதோ உங்கள் கொடிதான் ஓங்கிப் பறப்பதாக அரசாங்கத்துக்கு காட்டிக்கொண்டு வந்திர்கள்! ஆனல் அந்தோ பாவம்!

புதிய அரசியலமைப்பை எதிர்த்து, செப்டம்பர் 7ம் திகதி தமிழ்ஈழத்தின் ஏனைய பகுதிகளைவிட, மட்டக்களப்புத்தான் தீவிரமாகபொங்கியெழுந்தது; கடையடைப்பு கறுப்புக்கொடி, பகிஷ்கரிப்பு முதலிய நடவடிக்கைகள் மட்டக்களப்பில்தான் வேகமாக இடம் பெற்றன; அதன் விளைவாக மட்டக்களப்பின் இளம் சிங்கம் கவிஞர் காசிஆனந்தனும், மாவை சேனதியும் மற்றும் பதினெரு வாலிபர்களும் விளக்கமறியலில் . இன்று வைக்கப் பட்டிருப்பினும், மட்டக்களப்பின் மானத் தமிழன் தன் எழுச்சியைக் காட்டி விட்டான்; நீங்கள் போட்டு வைத்திருந்த பொய் மாயத்திரையைக் கிழித்தெறிந்து விட்டான். மக்களின் இந்தச் செயல் உங்களுக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் மூட்டியிருக்கும்.

என்னப்பா, மட்டக்களப்பு என் சுட்டுவிரலுக்கு கட்டுப்பட்டு நிற்கும்; அங்கு கூட்டணிக்கோ, தமிழ் ஈழக் கொள்கைக்கோ துளியும் ஆதரவில்லை— அவர்களையெல்லாம் ஊதித்தள்ளிவிட்டேன்; நானே அங்கு நாயகம்; என்றெல்லாம் கூறினயே இப்போது என்ன ஆச்சு என்று செப்டம்பர் 7க்கு பின்னர் உங்கள் சகாக்கள் உங்களைக் கேட்கும் போது— வெட்கமும், கோபமும், ஆத்திரமும் உங்களுக்கு பொத்துக்கொண்டு வரத்தானே செய்யும? அந்த ஆத்திரத்தின்— குமுறலின் சாயலை உங்களது மன்னர்ப்பேச்சில் நான் கண்டேன்.

ஐயா, தேவநாயகம், ஆத்திரப்பட்டும் குமுறியும் ஆவதென்ன? தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், அபிலாஷைக்கும் விரோதமாக எதிர்நீச்சல் போடப்புறப்பட்டால் இதுதான் நிலைமை!

முன்பும் இப்படித்தான் குமாரசூரியர் என்று ஒருவர் இருந்தார்; ராஜன் செல்வநாயகம் என்று ஒருவர்இருந்தார்; அருளம்பலம் என்று ஒருவர்இருந்தார். இவர்கள் எல்லாம் பதவியிலிருந்த போது அப்பப்பா ஆடிய ஆட்டமும் பேசிய வார்த்தையும் தான்என்ன? இன்று பதவி பறிக்கப்பட்ட பின்னர், பல்லுப்பிடுங்கப்பட்ட பாம்புகள் போல, இருக்கு

—5-ம் பக்கம் பார்க்க

# இது ஹிட்லரிஸம்!

பசித்த வயிற்றுக்கு ரொட்டி கேட்ட ஏழையிடம் ரொட்டி கிடைக்காவிட்டாலென்ன? அதற்குப் பதிலாக பாலும் பழமும் பருப்பும் வாங்கிச் சாப்பிடு என்று கூறினனும் ஒரு மதோன்மத்தன்! அந்த மதோன்மத்தனையும் விட மோசமாக இன்றைய ஆட்சியின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இறக்குமதித் தடைகள் முற்ருக அகற்றப்பட்டுவிட்டதால் பொருட்கள் தங்கு தடையின்றி இங்குவந்து குவிகின்றன என்பது உண்மைதான். ஆனல் அவைகள் கடைகளில் வெறும் காட்சிப்பொருட்களாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளனவே தவிர—சாதாரண ஏழை மக்கள் நெருங்கமுடியாத அளவுக்கு அவற்றின் விலைவாசிகள் செட்டைகட்டிப்பறக்கின்றன. வசதிபடைத்தவர்களும், பணக்காரவர்க்கமுமே ஜே. ஆரின் பொருளாதாரக் கொள்கையால் இன்று உப்பரிகை வாழ்வு நடத்துகின்றனர்!

உல்லாச, ஆடம்பரப் பொருட்கள் எப்படியோ போகட்டும்! ஆனல் ஏழைகளின்—சாதாரணத் தொழிலாளர்களின்—அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பால்—வாழ்க்கைச் செலவு உயர்வால்—இன்று பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கண்ணீர் வடிக்கின்றன; வாழ்வழியற்று திக்குமுக்காடுகின்றன.

ஆட்சிக்கட்டிலைப்பிடிப்பதற்காக, தேனும்பாலும் ஓடவைப்போம்—எட்டு இருத்தல் தானியம் தருவோம் என்றெல்லாம் கூறி, மக்களை ஏமாற்றி ஆட்சிபீடத்தைப் பிடித்தவர்கள்—இன்று அதிகாரத்தின் உச்சியில் நின்றுகொண்டு ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்கிருர்கள்!

இலவச அரிசி நீக்கம்!

நான்கு தடவைகளாக மா, பாண் விலையேற்றம்!

வெங்காயம், மிளகாய் இறக்குமதியினல் ஏழை விவசாயிகளின் வயிற்றிலடி!

பஸ்கட்டணங்கள் உயர்வு—

இன்ன பிற சுமைகள் மக்களை வாட்டுகின்றன. இந்த வாட்டத்தைத் தீர்க்க—ரூபா நோட்டின் பெறுமதியைக் கூட்ட—வாழ்க்கைசெலவுப் பளுவைக்குறைக்க ஆட்சியாளர் எதுவும் செய்யாமல்—ஜே. ஆருக்கு ''சர்வாதிகார முடிசூட்டுவிழா'' நடத்துவதில் ஈடுபட்டிருக்கின்றனர்; புதிய அரசியலமைப்பு மூலம் அந்த முடிசூட்டுவிழாவும் நடந்துமுடிந்துவிட்டது!

இந்தநிலையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த தொழிலாளவர்க்கம் தான் படுகின்ற துன்பத்தை வெளிப்படுத்த—தன்னுடைய குமுறலை எடுத்துக்காட்ட—தன்னுடைய நியாயமான கோரிக்கையை முன்வைத்து—இம்மாதம் 28ம் திகதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

இந்த அடையாள வேலைநிறுத்த அறிவிப்பு வந்த நேரம் தொட்டு தொழிலாளர்களை—தொழிற்சங்கங்களை நோக்கி மிரட்டல்கணைகள்பாய்கின்றன; வேலைநிறுத்தத்திலீடுபட்டவர்கள் வீட்டிலேயே இருக்கலாம்; அவர்களின் வேலை பறிக்கப்படும் என்று ஹிட்லரின் வாரிசுகள் எச்சரிக்கைவிடுகின்றனர்;

இத்தனைக்கும் மத்தியில்—புதிய அரசியல் சட்டத்தில்மட்டும் தொழிற்சங்க உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு எழுதிவைத்திருக்கிருர்கள்; நடைமுறையில் தொழிலாளர்களை நோக்கி சர்வாதிகாரப் பயமுறுத்தல் பாய்கிறது!

**தங்கள் நியாயமான கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்வதற்கு தொழிலாளர்களுக்கு பூரண உரிமை உண்டு; அந்தக்**

## எண்ணம்

**கோரிக்கைகளுக்கு அரசியல் சாயம் பூசி அவர்களது வேலை நிறுத்தத்தை முறியடிக்கமுயற்சிப்பது அசல் ஹிட்லரிசமே தவிர—ஜனநாயகமாகாது!**

முந்திய அரசு தொழிலாளர்களின் ஜனநாயக ரீதியான வேலைநிறுத்த உரிமையை மறுத்திருக்கலாம்; வேலை நிறுத்தங்களை அவசரகாலச் சட்டங்களை ஏவிவிட்டு முறியடித்திருக்கலாம்; ஆனல் முந்திய அரசைப் போல அல்ல நாங்கள்—நாங்கள் மக்களின் ஜனநாயக சுதந்திரங்களைப் பேணுபவர்கள் என்று வாய் ஓயாமல் கூறிக்கொண்டிருக்கும் இன்றைய ஆட்சியாளர்கள் தொழிற்சங்க உரிமையை கபளீகரம் செய்வதில் முந்திய அரசையும்விட மோசமான நடவடிக்கையிலா இறங்க வேண்டும்?

தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து—வேலை நிறுத்தம் செய்வதற்கு தொழிலாளருக்கு இருக்கின்ற உரிமையை சர்வாதிகாரமாகப் பறிக்கமுயலும் அரசின் எந்த முயற்சியையும் நாம் வன்மையாக எதிர்க்கிறேம். வேலை நிறுத்தத்தை கைவிடச்செய்ய அரசு விரும்புமாயின் தொழிற்சங்கத்தலைவர்களை நேரடியாக அழைத்துச் சமரசம் பேசட்டும்! அதுவே அமைதித் தீர்வுக்கு ஒரே வழியாகும்.

**சர்வாதிகாரம் யாரை நோக்கி ஏவிவிடப்பட்டாலும்— அடக்குமுறையாரை நோக்கி திருப்பிவிடப்பட்டாலும்—அவற்றுக்கு எதிராகப் போராடும் கரங்களுக்கு நமது ஆதரவு எப்போதும் உண்டு!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றங்களிலிருந்து தமிழுரிமையை

# அகற்றுவதற்கு சூழ்ச்சி!

## ஆங்கிலத்துக்கும் சிங்களத்துக்கும் வர்த்தமானி உத்தரவு மூலம் இடமளிப்பதேன்?

## தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய செயற்குழு கண்டனம்!

"தமிழ் ஈழத்தில் தமிழ்மொழி மட்டுமே நீதிமன்ற மொழியாக இருக்கவேண்டுமென்ற கொள்கையை முறியடிக்கும் முகமாக அண்மையில் நீதிமன்ற மொழிதொடர்பாக வர்த்தமானி மூலம் ஆங்கிலத்தையும், சிங்களத்தையும் புகுத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

"இந்த வர்த்தமானிப் பிரகடனம், புதிய அரசியலமைப்பு தமிழ்மொழிக்கு தக்க இடத்தையும், தகுந்த பாதுகாப்பையும் கொடுக்கவில்லையென்பதையே தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. வவுனியா, திருகோணமலை, அம்பாறை நீதிமன்றங்களில் சிங்கள மொழியையும் சகல நீதிமன்றங்களிலும் ஆங்கில மொழியையும் நீதிமன்ற மொழிகளாகப் புகுத்தியதை தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய செயற்குழு கடுமையாக ஆட்சேபிக்கிறது."

—மேற்கண்ட தீர்மானம் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் 16-9-78 ஞாயிற்றுக்கிழமை யாழ் கூட்டணி செயலகத்தில் நடைபெற்ற கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

## தேவநாயகத்துக்கு மடல் 1 ..

—4-ம் பக்கத் தொடர்

மிடமே தெரியாமல் பேச்சு மூச்சேயில்லாமல் இருக்கிறார்களே; ரதகஜ துரகபதாதியுடன் ஊர்வலம் வந்தவர்கள், இன்று பின்னால் செல்வதற்கு நாலுபேர் கூட இன்றி மோனத்தவம் செய்கிறார்களே— இவர்களைப் பார்த்தாவது உங்களுக்கு அடக்கமும் அமைதியும் வர வேண்டாமா?

ஏன் இவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது? தமிழ் மக்களின் தேசிய எழுச்சியையும் அரசியல் உணர்வுகளையும், அபிலாஷைகளையும் மதிக்கமறுத்து சிங்கள எஜமானர்களுக்கு சேவகம் செய்தனர்; தமிழ் மக்கள் இவர்களைத் தூக்கியெறிந்தனர்.

1983ம் ஆண்டு பொதுத் தேர்தல் வராமலா போகப் போகிறது? அப்போது குமாரசூரியருக்கு ஏற்பட்ட பரிதாப நிலை உங்களுக்கும் ஏற்படாதென்பது என்ன நிச்சயம்?

சரி, மன்னார்க்கூட்டத்தில் நீங்கள்பேசியிருப்பதாக பத்திரிகையில் வெளிவந்திருக்கும் கருத்துக்களை ஒவ்வொன்றாக ஆராய்வோம்!

"தமிழ் பேசும் மக்கள் கூட்டணி மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர்" என்று கூறியிருக்கிறீர்கள். இப்படிக்கூறி நீங்கள் உங்கள் மனதை தேற்றிக் கொள்வதைப்பற்றி எனக்குக்கவலையில்லை, ஆனால் இப்படித்தான் முந்திய அரசும் கூறியது; முந்தியஅமைச்சர் குமாரசூரியரும் கூறினார். இன்று குமாரசூரியர் இருக்குமிடம் தெரியவில்லை; கூட்டணி தலைநிமிர்ந்து நிற்கிறது.

கூட்டணி மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கைகுறைந்து விட்டதாக எந்த அளவைக் கொண்டு கூறுகிறீர்கள்? புதிய அரசியலமைப்பை எதிர்த்து செப்டம்பர் 7ம் திகதி பகிஷ்கரிப்பு நடத்தும்படி தமிழ்மக்களைக்கூட்டணி கோரியிருந்தது அப்படியே நடத்திக்காட்டினர் தமிழ் மக்கள். இது தமிழ் மக்களுக்கு நம்பிக்கைகுறைந்து வருவதற்கு அடையாளமா? கூட்டணி மீது தமிழ் மக்களுக்கு ஏதாவது ஆதங்கம் இருக்குமானால் — கூட்டணி இன்னும் வேகமாக— சிங்கள அரசை எதிர்த்தும், தமிழ் ஈழத்தை நிலைநாட்டவும் களத்திலிறங்காமலிருக்கிறதே என்பதனாலிருக்குமேதவிர—வேறு எதற்காகவும் அல்ல!

சரி, தமிழ்மக்கள் கூட்டணிமீது நம்பிக்கைகொண்டிருக்கிறார்களா இல்லையா என்பதை அறிவதற்கு — தந்தைசெல்வா அவர்களைப் போலஇன்றைக்கும்இடைத்தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்கு கூட்டணி தயாராகவேயிருக்கிறது. ஆனால் உங்கள் அரசியலமைப்புத்தான் இடைத்தேர்தலையே இல்லாமற் செய்து ஜனநாயகத்தையே குழி தோண்டிப் புதைத்து விட்டதே!

அடுத்து, கூட்டணி அரசியலின் பேரால் தமிழ் பேசும் மக்களை கடந்த இருபது ஆண்டுகளாக ஏமாற்றி வந்திருக்கிறதென்றும், காலத்துக்குக் காலம் தமது கொள்கைகளை மாற்றி வருகிறதென்றும், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கூட்டணியினர் எதையும் சாதிக்கவில்லையென்றும் கூறியிருக்கிறீர்கள்.

தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிவருவதும், கொள்கையில் அடிக்கடி குத்துக்கரணமடித்துவந்திருப்பதும் நீங்களும் நீங்கள் சார்ந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியுமா அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியா என்பது பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

## தீண்டாமை ஒழிப்பு கருத்தரங்கு

தையிட்டி வள்ளுவர்புரம் சனசமூக நிலையமுன்றலில் தீண்டாமை ஒழிப்பு பற்றிய கருத்தரங்கு ஒன்று சட்டத்தரணி திரு. அ. குமரகுரு தலைமையில் 23-9-78 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் திரு. வி. தர்மலிங்கம் பா.உ., சி. கதிரவேற்பிள்ளை பா.உ., சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

# முல்லைத்தீவு தனிமாவட்டம்

## செல்லத்தம்புவின் பணி வெற்றி!

வரலாற்றுப் பெருமையும் தமிழ் ஈழத்தின் கடல் வளமும், மண்வளமும், காட்டுவளமும் நிறைந்த பூமியுமாகிய முல்லைத்தீவு தொகுதி தனிமாவட்டம் என்றநிலையை 1-9-78முதல் அடைந்துள்ளது.

பண்டைத் தமிழர்கள் நிலத்தை, பாலை, நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என ஐவகையாகப் பிரித்திருந்தார்கள். காடும், காடடர்ந்த பிரதேசமும் முல்லை என்று அழைக்கப்பட்டது. அந்தப்பழம்பெரும் தமிழ் மரபுப்படி அமைந்த முல்லைத்தீவு இன்று விவசாயப் பூமியாகவும் மீன்வளத்தின் இருப்பிடமாகவும் விளங்குகிறது. தமிழ் வேந்தர்களான வன்னியர்கள் தனியாட்சி நடத்திய பெருமையும் இந்த மாவட்டத்துக்கு உண்டு.

11,000 சதுரமைல்கள் கொண்ட முல்லைத்தீவு பிரதேசத்தை ஒருதனிமாவட்டமாக்க வேண்டுமென்றுதணியாத வேட்கைகொண்டு அதற்காக உழைத்த முல்லைத்தீவு பா.உ. திரு. சே.மா. செல்லத்தம்பு, இன்று தமது பணி வெற்றியடைந்தது குறித்து உளம்பூரிக்கிறார். அவருடன் சேர்ந்து முல்லைத்தீவு மக்களும் குதூகலிக்கிறார்கள்.

முல்லைத்தீவை தனிமாவட்டமாக்க வேண்டுமென்று திரு. செல்லத்தம்பு எடுத்துக்காட்டிய வாதங்களையும், முன்னிறுத்திய நியாயங்களையும் தட்டமுடியாத நிலையில் இன்று முல்லைத்தீவை ஒரு தனி மாவட்டமாக்கியுள்ளனர் ஆட்சியினர்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற குறள் மொழிக்கொப்ப— செல்லத்தம்புவை பிரதிநிதியாகப் பெற்றதனால் முல்லைத்தீவுக்கு இன்று தனி அந்தஸ்து கிடைத்துள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தை தனிமாவட்டமாக்கும்படி கோரி திரு. செல்லத்தம்பு எடுத்துக்காட்டிய ஆதாரங்களை ஒரு நூலாக வெளியிட்டிருக்கின்றனர் புதுக்குடியிருப்பு தமிழர் விடுதலைக்கூட்டணியினர்.

முல்லைத்தீவு மக்களுக்கும் திரு. செல்லத்தம்புவுக்கும் சுதந்திரன் சார்பாக நமது வாழ்த்துக்கள்.

—1-ம் பக்கத் தொடர்

15-9-78வெள்ளிக்கிழமை இவர்கள்மீதான விசாரணை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இவர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் சட்டத்தரணிகளான திருவாளர்கள் சாம் தம்பிமுத்து, ஏ. எம். சம்சுத்தீன், எஸ். உருத்திரமூர்த்தி, ஏ. எச். எஸ். அஷ்ரப், டி. சி. சின்னையா, செல்வி. மஞ்சுளா கந்தையா, வி. காராளசந்திரா, ஜெஹ்ஜேனல்ட் கோபாலபிள்ளை ஆகியோர் ஆஜராகினர். இவர்களை பிணையில் விடலாமென்பதற்கு காரணங்கள் காட்டி சட்டத்தரணி சிவா சட்டவாதம் நிகழ்த்தினார். இதுசம்பந்தமான தீர்ப்பு 18-9-78வரை ஒத்திவைக்கப்பட்டது.

18-9-78ல் நீதிமன்றம் கூடியபோது, எதிரிகளைப் பிணையில் விடுவதற்கான காரணங்கள் நன்கு புலப்படுத்தப்பட்டிருப்பதால், எதிரிகளில் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட முதல் ஏழுபேரையும் தலா ஆயிரம் ரூபா ஆதனப் பிணையிலும், கடைகளை மூடுமாறு நிர்ப்பந்தப்படுத்தியதாக [illegible] ருள்ள இதர நான்கு பேரையும் தலா 500ரூபா ஆதனப் பிணையிலும் விடுதலை செய்வதாக நீதிபதி திரு. சி. மனோகரா தீர்ப்பு வழங்கினார்.

### புதிய குற்றசசாட்டு

காசி, மாவை, மற்றும் இளைஞர்களைப் பிணையில் விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பு வழங்கியதும், நீதிமன்றத்தில் தயாராகக் காத்துக்கொண்டிருந்த மட்டக்களப்பு பொலிசார், இவர்களுக்கு எதிராக புதிய குற்றப் பத்திரிகையொன்றைத் தாக்கல் செய்தனர்.

கடந்த 5ம் திகதி பொதுக் கூட்டமொன்றைக் கூட்டி அரசாங்கத்துக்கு எதிராகச் சதிசெய்யுமாறு மக்களைத் தூண்டியது; துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தது இதன் மூலம் பேருந்து ஒன்று கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகக்காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராகப் புதிதாக பொலிசாரால் சுமத்தப்பட்டன.

அப்போது நீதிமன்றத்தில் எதிரிகள் சார்பில் பிரசன்னமாக இருந்த சட்டத்தரணி திரு. சாம் தம்பிமுத்து, ஒரே சம்பவத்தை முன்வைத்து இரு வழக்குகள் பொலிசாரால் தாக்கல்செய்யப்படுவதை ஆட்சேபித்து, எதிரிகளை பிணையில் விடுமாறு வாதாடினார். பொலிசார் இதற்கு ஆட்சேபித்தனர்.

"11இளைஞர்களையும்புதிய குற்றச்சாட்டின்பேரில் மீண்டும் விளக்கமறியலில்வைத்த நீதிபதி சி. மனோகரா, பிணை சம்பந்தமானதமதுதீர்ப்பை 22 9-78ல் வழங்குவதாகக் கூறி வழக்கை ஒத்திவைத்தார்.

கல்குடாத்தொகுதியில் கடந்த பொதுத் தேர்தலில் நீதியமைச்சர் திரு. தேவநாயகத்தை எதிர்த்து தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் போட்டியிட்ட திரு. சி. சம்பந்தமூர்த்தியின் பெயரும் பொலிசாரால் இப்போது புதிதாக காசி, மாவைக்கு எதிரான குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளது. திரு. சம்பந்தமூர்த்தியை கைதுசெய்வதற்கு பிடி ஆணை (பிடிவிறுந்து) வழங்கப்படவேண்டுமென்று பொலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நீதவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதையடுத்து, திரு. சி. சம்பந்தமூர்த்தியை எவ்விடத்திலாயினும் எந்நேரத்திலாயினும் கைதுசெய்யுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு மட்டக்களப்பு பொலிஸ் தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தியாகிகளின் தியாகம் திசை திருப்பப்படக்கூடாது

பேரறிஞர் அண்ணு அவர்கள் அமரர் வன்னியனுரை நன்றியுரை கூறும்படி பின்வருமாறு அழைக்கிருர்.

''வெள்ளையனுக்கு ஒரு பகவத்சிங்; யேம்சனுக்கொரு வாஞ்சிநாதன்; இந்திக்குத் தாலமுத்துவும். நடராசனும்; சிங்கக் கொடிக்குத் திருமலை நடராசன்; சிங்களக் கொடுங்கோன்மைக்குச் சிவகுமாரன்; உயிர்ப் பலியூட்டினுர்கள். தனிஇளைஞன் சக்தி—அவனது உயிர்த் தியாகம் — ஒரு தேச ஆட்சியையே ஆட்டி அசைத்து வாட்டி வதைக்குமேயானுல் அந்த இளந்தியாகியின் உடலிலிருந்து சீறப்பாய்ந்து திக்கெட்டும் பரவும் இரத்தச் சிதறல்களால் வீர உணர்வேறி ஒன்று திரளும் இளைஞர் அணியின் மாபெருஞ் சக்தி இமயத்தையே பொடிப்பொடியாய்—அணுவணுவாய் ஆக்கி— வருணன், வாரிவையகமெலாம் பரப்பவைக்குமென்ற உண்மையை அரசியல்வரலாறு தெரியாத பிரதமர்கள், ஜனதிபதிகள் தெரிந்துகொள்ளவேண்டும். விஞ்ஞானத்தோடு விளையாடிய தமிழன் வஞ்சனைக்கு ஆளாகினுன் அன்று. ஆரியக் கொட்டம் அடங்கிய பின்னரும் ஆரிய வம்சச்சிங்களவர்க்க ஆட்சிசிறிது சிந்திக்க வேண்டும்.

''தியாகப் பெருஞ்சுடர்—சிந்தனைக்கருவூலம்—தமிழர்தம் பெரு வாழ்வுக்கு வித்திட்ட எங்கோமான் வன்னியரின் தகவுரையும்; வழிமுறையும் கேட்க அகமகிழ்ந்து முகமலர்ந்து—நகை முகத்தால் மகிழ்வொலிகாட்டும்அமரர்சபை ஆசை நிறைவுற — அழைக்கின்றேன் அண்ணல் அமரர் வன்னியப் பெம்மானை''

### வன்னியர் வாயுரை

எந்தை திருவடி இதயமிருத்துவோம்.

அடிமைத்தளையைச் சாடி, ஆரியமாயைபோக்கி—சமுதாய மடமைகளுங் கொடுமைகளும் தகர்க்கப்பட்டு, எதிர்ப்புக்களை நீருக்கி உள்ளுவதெல்லாம் உயர்வுன்னி — பாமரராய் விலங்குகளாய் — பஞ்சைகளாய் பராரைகளாய்ப் பரிதவித்த மக்களுக்குப் பகுத்தறிவுச்சுடர் மூலம் எழுச்சியுறவைத்து-நாடற்ற தமிழனுக்கு ''தமிழ் நாடு'' என்ற பெயரை உலக வரைபடத்தில் முதன் முதலாக வரையவைத்து — இந்திய உபகண்ட அரசியல் பேர

—2-ம் பக்கத் தொடர்

யைப் பற்றி எங்கேயாவது பிரசுரித்திருக்கிருர்களா என்று பார்த்தால் மருந்துக்கும் கிடைப்பதில்லை. ஆபிரிக்கா பற்றியும் தென்அமெரிக்கா பற்றியும் உங்கள் சென்னைப் பத்திரிகைகள் காட்டும் அக்கறை. இலங்கையைப் பற்றிக் காணபதில்லையே!'' என்ருர் அவர்.

உண்மைதான், அவ்வப்போது 'ஹிந்து' பத்திரிகையில் கே. வி. எஸ். வாஸ் அனுப்பும் செய்திகளையும்; 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் நடராஜா அனுப்பும் செய்தித் துணுக்குகள் அபூர்வம். மிக மிக முக்கியமான செய்திகளானுல் அவை ராய்ட்டர் மூலமாகத்தான் வெளிவருகின்றன.

—சோ. சிவபாதசுந்தரம்- இலங்கைப் பயணக்கட்டுரை

(கல்கி 23-7-78)

# அது முழுமையாக இலட்சியத்துக்கே பயன்படுத்தப்பட வேண்டும்!"

வையை அதிரவைத்து—தமிழ் நாட்டுப் பிரதமர் பதவியெனும் பெயரால் செங்கோன்மையை உலகறிய வைத்து, தமிழர் வாழ்வுக்குப் புதிய திருப்பம் அமைத்த அன்புக்கடலே! அறிஞர் அமரர் அண்ணுவே!

மாசிலாத அரசியல் வழி சென்று அமரத்துவம் அடைந்து விண்ணுலகில் வீற்றிருக்கும் என் உயிர்த்தெய்வ கணங்களே! இளந்தேவ கூட்டமே!

அடியேன் இத்தேவ உலகு புகுந்த நாளை நினைவுகூருவதன் மூலம் எனது தியாகத்தைப் போற்றுவதற்காக இத்திருக்கூட்டத்தை நடாத்தஉளங்கொண்ட அனைவர்க்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துகிறேன்.

''தியாகிஅழியலாம்; தியாகம் அழியாதெனத் தலைமை தாங்கும் அமரர் அண்ணு கூறினுர். ஒருவன் செய்த தியாகம் அவனுடைய இலட்சியத்துக்குப் பயன்படுத்தப் படவேண்டுமேயொழிய— அத்தியாகம் வேறு துறைகளுக்குத் திருப்பிவிடப்படு. மேயானுல் அதனைப்போன்ற துரோகம் — படுகொலை— வேறென்றுமேயில்லை.

இத்திருக்கூட்டத்தை ஏற்பாடு செய்த அமர இளவல் சிவகுமாரனின் இணையற்ற தியாகத்தை அவன் லட்சியமான தனிநாட்டுக்குப்பயன் படுத்தாது — பதவிமோகத்துக்கு இரையாக்கி — மக்களைத் திசை திருப்புவதேயானுல்—இந்த வீரப்பிரதாபத்துக்கு என்ன பெயர் சூட்டலாம்? சிவகுமாரனின் தியாகம்—இங்குள்ள இளவல்களின்—பெரியார்களின் தியாகம் அனைத்தும் விடுதலை பெற-உரிமை பெறஉபயோகப்பட வேண்டியதேயொழிய—சலுகைக்கோ லஞ்சத்துக்கோ—பதவிக்கோ பயன்படுத்தப்படுவது நம்பிக்கைத் துரோகம் மட்டுமல்ல-விடுதலை இயக்கமொன்றை வழிநடத்த முன்வந்த பகுத்தறிவு படைத்த எந்தச் சிறியதொண்டனுக்கும் அருகதையற்ற பஞ்சமாபாதகச் செயலாகும். காரணம்: சிவகுமாரன் லட்சியத்துக்காகத் தன்னை உயிர்ப்பலியூட்டினுன்; அந்தத் தியாகத்தை தவறான பாதையில் பயன்படுத்துவோன் பாவியாகிருன். சாதாரண ஒரு ஜீவனைப் பாவியாக மாற்றுச்சிவகுமாரனின் தியாகம் வழிவகுத்ததால் சிவகுமாரன் துரோகியாகிருன்; இந்நிலையடைய—இந்தப் பட்டத்தைப் பெறவா சிவகுமாரன் தன்னை உயிர்ப்பலியூட்டினுன்?

''எங்கள் இயக்கத்தை வழி நடத்தும் கண்ணியவான்களே! கடமையைச் செய்வோன் தியாகி; கடமையை மறந்தோன் — பொறுப் புணர்ச்சியற்றோன், துரோகி. நீங்களுந் துரோகிகளாய்—தியாகஞ் செய்தோருந் துரோகிகளாய்—மிடிமை மற்றவர்களாய்-நம்பிய மக்களை நட்டாற்றில் ....

வரலாற்றைப் படைத்தவர்களாய் மாற வேண்டுமென்பது தான் முடிந்த முடிபா? தேவதேவனே! கருணையங் கடலே! எங்கள் இயக்கம் வளர்ந்தோங்க எத்தனை சீமான்கள் கோவண ஆண்டிகளானுர்கள் எத்தனை தொண்டர்கள் உயிரைக் கையிற்தாங்கி—தம் உதிர நீரைப் பாய்ச்சி — உடலை எருவாக்கினுர்கள்? வாழ்விழந்த தாய்க்குலமே! கற்பிழந்த கன்னியர்கூட்டமே! அன்னை தந்தையரையிழந்து சொத்திழந்து — சுகமிழந்து அனுதைகளாய்த் தெருத் தெருவாய் கஞ்சிக்கலையும் இளவல்களே! உங்கள் கண்ணீர்க்கடலுள் தமிழ்பேசுமினம் தத்தளிப்பதைச் சிந்திப்பாரில்லையா? இயக்கம் வளரத் தன்னையே பரித்தியாகஞ் செய்தவன் உதறி எறியப்படுகிருன். உல்லாச வாழ்வுக்காரன் இயக்கத் துட்புகுந்து கொண்டான்.

யாருக்குந் தெரியாமல் விடுதலைக்காக இயங்கும் சிறு கூட்டமும்—மக்களறிய

## அமரர்கள் எடுத்த விழாவில் கோப்பாய்க் கோமகனின அறவுரை!

விடுதலைக்காக உழைக்குஞ் சிறு கூட்டமுமாக இயங்கும் மிகச்சிலரின் தியாகத்தைக் கூட—பதவிக்காக — குபேர வாழ்வுக்காக அர்ப்பணஞ் செய்வதென்ருல், இதன் அர்த்தமென்ன? மகேஸ்வர (சர்மா) என்ற இளைஞன் என்னுல் அரசியல் வாழ்வுக்குள்புகுத்தப்பட்டவன்: வாழ்வை இழந்தான், சுகத்தை இழந்தான்; புரட்சிக் கவிஞன் பாரதியின் வழியில் பிராமண மரபையே தூக்கியெறிந்துவிட்டு- இயக்கக்கட்டுப்பாடு காத்தோன்; இன்று விடுதலைக்காக இருபத்து நாலு மணிநேரமும் சிந்திக்கும் — விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுள் அவரும் ஒருவர்; ... தன் சிந்தனையால்—அயரா உழைப்பால்—அபாரதியாகத்தால்- இயக்கத்தைப் பூதாகாரமாக்கி — உணர்வையூட்டி— உலகையே தமிழ் ஈழம் நோக்கி இழுத்துக்கொண்டிருக்கிருர். ஆட்சியாளர்க்கோ சாட்டையடி; இயக்கத் தலைவர்களுக்கு இடித்துரை; இளைஞர்களுக்கோ அறிவுரை; துரோகிகளுக்குப்படுகுழி; சுதந்திரன் என்ற இதழ் மூலம் கோணலை மகே

சன் என்ற பெயரில் இப்பெரும்பணியை அவர் ஆற்றுவது விடுதலைக்காக; ஆனுல் இத்தியாகம் பதவிக்காக — உல்லாச வாழ்வுக்காக — விஷவிருட்சத்துக்காக— உரமாக்கப்பட்டால் பாவம், இந்த இளைஞனைத் துரோகியாக்கிய படுகொலைக்கு ஆளாவது யார்?

''நன்றுற்றலுள்ளுந் தவறுண்டவரவர்
பண்பறித் தாற்றுக்கடை'

என்ற வள்ளுவப் பெருந்தகை ஆற்றிய வாயுரையின் பேருண்மையைஇன்றுதெளிகிருேம். பொதுக்கூட்டம், பொதுப்பணி, கருத்தரங்கு, பத்திரிகை, பேட்டிகளின் மத்தியிலும் இளவல் சிவகுமாரன், இராசரத்தினம் என்போர் இங்கு பேசியவற்றைத் தமிழ் பேசும் மக்களுக்கு அவரே நெறிப்படுத்தினுர். இத்துணை அருப்பாடோம்புந் தியாகியின் தியாகம் விழலுக்கிறைக்கப் படுமேயானுல்- விடுதலையின் முடிவு சொல்லாமல்விளங்குமன்ருே.

தேவநிலைத் திருக்கூட்டமே!

இரவு இரண்டுமணி; திருமலை — குருேவபொத்தனை வீதியில் பெருங்காட்டுப் பகுதியில் கார் ஒன்று நிற்கிறது. காரினுள் நால்வர் இருந்தனர். காரைநோக்கி முன் பக்கமாக அலியன் ஒன்று வருகிறது; காரின் பின் புறத்தால் யானைக்கூட்டம் தெருவைக்கடக்கிறது. காரினுள் இருந்தோரின் உயிர் உடலை விட்டுப்பிரியஇரண்டு நிமிட கால எல்லைதான் இருக்கும்.

உச்சிமீது வானிடிந்து
விழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே;

திருமலையில் வகுப்புக்கலவரம் உச்ச நிலை. தந்தி வந்தது உடனே கட்சிக்காரியாலயத்து நின்றபடி நால்வர் புறப்பட்டோம்; திருமலையை மாலை 3 மணியளவில் அடைந்தோம்; துப்பாக்கிச் சூடுபட்டு அரசினர் வைத்தியசாலையில் இருந்தவர்களைப் பார்த்தோம். வைத்தியர்களைச் சந்தித்தோம். அரசாங்க, பொலிஸ்அதிபர்களை இராசவரோதயமும் நானும் சந்தித்தோம்; கலவரத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்த்தோம்.

இரவு ஏழுமணி; அன்று சாம்பல்தீவில் வாலிபமுன்னணி ஆண்டு விழா. வகுப்புக் கலவரத்தால் திருமலை பயத்துள்மண்டி வெறிச்சோடிக் கிடந்தது. சாம்பல்தீவு வாலிபர்கள் எமது வருகை கேட்டு திருமலை வந்து விழாவிற்கலந்து கொள்ளுமாறு வற்புறுத்தினுர்கள். திருமலை மக்கள் தடுத்தார்கள், திருமலை பத்தாம் வட்டாரத்தோர் முன்னணி வகிக்க எல்லோரும் துவிச்சக்கரவண்டியில் சென்று ஆண்டு விழாவை

நடாத்தித் திரும்பித் திருமலை சென்று அங்கும் செய்ய வேண்டியனமுடித்து இரவு பன்னிரண்டரைமணியளவில் அங்கிருந்து புறப்பட்டு காலை யாழ்ப்பாணத்தை அடைந்தோம்.

வகுப்புக்கலவரத்தால் அம்பாறை தமிழ்பேசும் மக்களின் கூக்குரல் ஒலியோடு அவர்களின் இல்லங்கள் தீப்பற்றிவானேக்கி எழுந்த சாம்பல் துகள்களும் யாழ்ப்பாணத்தை வட்டமிட்டன. வாதநோயால் கஷ்டமுற்றிருந்தேன்; தொலைபேசி மூலம் கட்சியாளருடன் தொடர்பு கொண்டேன். கடைசியில் நானே மட்டு நகர்இராசதுரைவீடுசென்று இருவருமாக சங்கார கால அக்கினிக்குண்டங்களையும், உடைக்கப்பட்ட பாலங்கள், சிதறிய தெருக்கள், தடைபோடப்பட்ட வீதிகள், சிங்களக் கொலைக்கத்திகளின் வீச்சுகளைத்தாண்டி அம்பாறைசென்ருேம், தமிழ்பேசும் மக்கள் குடியிருந்த பசுஞ்சோலை சாம்பல்மேடுகளாகக் கிடந்தன; மக்களைத் தேடினுேம்; காடுகளில் மறைந்து உயிருக்காக மன்ருடிக் கொண்டிருந்த மக்களை அழைத்து வந்து சாம்பல் மேடுகளில்— தமிழன் தன்மானப் பூமியில் குடியிருத்தினுேம். பயங்கரமின்றி வாழவழி வகுத்தோம்.

காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம். என் இருகரங்களிலும் தலைமயிரிலும் பத்துச் சிங்களக்காடையர் பிடித்து இழுத்து உருட்டி உதைத்து அடித்தார்கள். சட்டையைக்கிழித்தார்கள். அந்தக்கோலத்துடன் பாராளுமன்றஞ் சென்றேன். இத்தகைய தியாகங்கள் நான் மட்டுமல்ல; ஆரம்பகால இயக்கம் சுதந்திர இயக்கமாகவே வளர்ந்தது. அந்த இயக்கத் தொண்டர்களின் தியாகங்கள் இன்று லட்சியந் தவறி— திசை தப்பி— செலுத்தப்படுவதைநினைக்க நெஞ்சுபொறுக்குதில்லையே! இறைவா! என்மக்கள் அழியத் திருவுளமோ?

எங்கள் மக்கள் ஒவ்வொரு திருப்பத்திலும் சிங்கள இனவெறி ஆட்சியாளரின் முப்படையாலும், சிங்களக் குண்டர்களாலும் இரையாக்கப்படுவதன் சதித்திட்டம் உலகமே அறிந்த உண்மை. வகுப்புக்கலவரமென்ற கருந்திரையை உலகுக்குக்காட்டி, எமது மக்கள் தாயகத்தைக் கபளீகரஞ் செய்யும் படுகொலை ஆட்சியாளரிடம்உரிமையை எதிர்பார்க்கும் விநோதத்தின் மர்மம் விரைவில் புலனுகும்.

தனிநாடென்பது சிங்கள ஆட்சியாளர் தரும் அல்வாத்துண்டல்ல, எங்கள் இனத்தின் வியர்வை— கண்ணீர்— ரத்தம்— தியாகம்— சித்திரவதை— உயிர்ப்பலி முதலியவற்ருல் கட்டியெழுப்பப்பட வேண்டிய செங்கோட்டையாகும்.

(வன்னியர் தொடர்ந்து பேசுகிருர்— அடுத்த வாரம்)

ஒரு கற்பனைச் சித்திரம்: ஆசிரியர் வித்துவான் வ. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1744 ஆண்டுகள் ஈழத்தைத்தமிழன் ஆண்டான்!

# வீம்புபேசுவோரே! வரலாறுகூறும் உண்மை இது!

(சென்றவாரத் தொடர்)

## றொபெட் நொக்ஸ்:-

கி. பி. 1660ம் ஆண்டில் றொபெட் நொக்ஸ் (Robert Knox) என்ற ஆங்கிலேயர், திருகோணமலையில் வைத்துக் கண்டி அரசனின் படைத்தளபதிகளால் சிறைப்பிடிக்கப்பட்டார். 1679ல் இவர் சிறையிலிருந்து தப்பியோடினார். தப்பியோடிய அவர் சிறைவாழ்வு பற்றி நூல் ஒன்றை எழுதினார். இந்நூலில் இலங்கையில் தமிழர்கள் தனியான நாட்டினமாக வாழ்ந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

தப்பி ஓடும் வழியில் அனுராதபுரத்தை அடைந்த நொக்ஸ் அங்கு சிங்கள மொழி தெரிந்தவர்கள் இல்லாமை பற்றிக் குறிப்பிட்டு சந்தைகளிலும், கடைத்தெருக்களிலும், ஊர்களிலும், தமிழர்கள் வாழ்ந்தமை பற்றிக் கூறியுள்ளார்.

மேலும் அக்காலத்தில் வன்னிப் பகுதியைகைலாய வன்னியன் ஆட்சி செய்தமையை நொக்ஸ் குறிப்பிடுகிறார். ''தன்னாட்சியுள்ள சுதந்திரமுள்ள அரசை அமைத்ததலைவர் இளவரசன்'' என றொபெட் நொக்ஸ் குறிப்பிடுகிறார். தான் கீறிய இலங்கைப் படத்தில் கைலாய வன்னியனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை தெளிவாகக் காட்டியுள்ளார் COYLET WANNEA என்ற எழுத்துடன் குடாநாட்டிற்குத் தெற்கேயுள்ள வன்னிப் பகுதியும், கிழக்குக் கரையோரமாகவுள்ள வன்னிமைகளும், கைலாய வன்னியனின் கீழ் இருந்தமையைக் குறிப்பிட்டுள்ளார்,

## ரேலண்ட் குறிப்புகள்:-

ஒல்லாந்து தேச அறிஞராகிய அன்றியன் ரேலண்ட் (ADREAN RELAND) குறிப்பிடுவதாவது: ''இலங்கையின் பெரும் பகுதி தமிழர்களின் வாழ்விடமாக உள்ளது. கரையோரமாக உள்ள நிலம் அனைத்தும் கைலாய வன்னியனுக்கு (COILAT WANEA) உரியது, கரையோரங்களிலும் யாழ்ப்பாணப் பகுதி மாவட்டங்களிலும் தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களே வாழ்கின்றனர்,''

## சுவைட்சர் குறிப்புகள் கி. பி. 1700:-

ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைத் தீவுக்கு வந்து சென்றவர்களுள் கிறிஸ்ரோபர் சுவைட்சர் (CHRIS-TOPHER SCHEWITZER) என்பவர் விட்டுச் சென்ற குறிப்புகள் முக்கியமானவை அவர் கூறுவதாவது;- ''இந்தத்தீவின் மற்றக் குடிகளான தமிழர்கள், காலி, மட்டக்களப்பு, திருகோணமலை, அரிப்பு, கற்பிட்டியிலிருந்து நீர்கொழும்புவரை வாழ்கிறார்கள், வன்னிநாட்டிலுள்ள தமிழர்களைத் தவிர ஏனைய தமிழர்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் உள்ளார்கள். வன்னிநாட்டிலுள்ள தமிழர்கள் தமக்கென ஓர் அரசைக் கொண்டுள்ளார்கள்.

## அரோசிமித்தின் வரைபடம்

இன்றைய இலங்கைப் படம் அரோசிமித்தின் (ARROWSMITH) இலங்கைப்படம் எனப் புகழ்பெற்றுள்ளது. இவரின் படத்தின் படி நீர்கொழும்பிலிருந்து தென்கிழக்காக, கும்புக்கன் ஆறுவரையுள்ள நிலப்பரப்பு சிங்களவரின் வாழ்விடமாகும். ஏனைய கரையோர நிலப்பகுதிகள் தமிழரின் வாழ்விடங்களாகும். தீவின் நடுப்பகுதி கண்டி அரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்ததையும் இந்தவரைப் படத்தில் காட்டுகிறது.

## இளெக்கோர்ன் குறிப்பு:-

இலங்கையின் முதல் பிரிட்டிஷ் ஆளுனரான நோர்த் அவர்களின் செயலாளராக இருந்தவர் பேராசிரியர் ஹியு கிளெக்கோர்ன். இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் தமிழர்களால் ஆட்சி செய்தபகுதியாகும். நீர்கொழும்புக்கு வடக்கே தமிழர்கள் வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்ததை இவரின் குறிப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

## அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன்:-

இலங்கையின் சட்டமா அதிபரும் உயர் நீதிமன்ற நீதியரசருமாகிய இவர் கி. பி. 1807 நவம்பர் 4ம் நாள் அக்கால ஆளுனராகிய சர் தாமஸ்மெயிட்லாந்துக்கு எழுதிய குறிப்பு ஒன்றில், புத்தளம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்குமாகாணங்களும். வடமேற்கிலுள்ள புத்தளத்திலிருந்து, தென்கிழக்கேயுள்ள கும்புக்கன் ஆறுவரையுள்ள நிலப்பகுதி தமிழரின் குடியிருப்புகளாகுமென குறிப்பிட்டிருக்கிறார்.

## கண்டியும் நாயக்க மன்னர் ஆட்சியும்

1739ம் ஆண்டு கண்டியை கடைசிச் சிங்கள மன்னன் நரேந்திர சிங்கன் இறந்தான். அவனுடைய தாயும் மனைவிமாரும் தென்னிந்தியாவிலுள்ள நாயக்க வம்சத்தில் உள்ளவர்களாகும். நரேந்திர சிங்கனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் அவனின் மனைவியின் சகோதரன் (மைத்துனன்) ஸ்ரீ விஜய இராசசிங்கன் 1739ம் ஆண்டு தொடக்கம் ஆளத் தொடங்கினான்.

1744ல் இவன் இறந்தான். இவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் தன்னுடைய மூத்த மைத்துனனைத் (வயது 14) தனக்குப் பின் அரசனாக வேண்டுமென்று நியமித்தான். 1751ல் கீர்த்திஸ்ரீ இராசசிங்கன் என்ற பெயருடன் அரசனானான். இவன் 1782ல் இறந்தான். பின்னர் இவனின் சகோதரன் இராசராசசிங்கன் என்ற பெயருடன் 1780ல் அரசனானான். இவன் 1798ல் இறந்தான். 1798ல் ஸ்ரீவிக்கிரம இராசசிங்கன் அரசனானான்.

சர்வ வல்லமையும் கொண்ட கண்டியை ஆண்ட இந்தக் கடைசித் தமிழ்மன்னன் இறுதிவரை தன்னுடைய திறமையைக் காட்டி 1815ம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கைதுசெய்யப்பட்டு வேலூருக்கு அனுப்பப்பட்டான். இத்துடன் கண்டியை ஆண்ட தமிழ் அரசவம்சம் அற்றுப்போயிற்று.

## இராமநாதனும் சட்டசபையும்

1911ம் ஆண்டுசட்டசபை இருந்த காலத்தில் இலங்கையருக்கானமுதலாவது(சட்டசபை) ஸ்தானம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபோது, சேர்.பொன். இராமநாதனையே அந்தஸ்தானத்திற்கு நியமிக்க வேண்டுமென்று ஹெக்டர் ஜெயவர்தனவும் (ஜே.ஆரின் சிறிய தந்தை). தந்தையாகிய ஈ. டபிள்யூ. ஜெயவர்தனவும், பிரசாரம் செய்து யாழ்ப்பாணத்திலும் மாபெரும் பொதுக்கூட்டமொன்று வைத்து ஆதரவு திரட்டினார்கள்.

இந்த நேரத்தில் சேர். பொன். இராமநாதன் தியானத்தை மேற்கொள்ளுவதற்கு ஆயத்தமாக இந்தியாவுக்குச் சென்றுவிட்டார். இவர்கள் இருவரும் தியானத்தை மேற்கொள்ள ஆயத்தமாயிருந்த சேர். பொன். இராமநாதனை அழைத்து வந்து இலங்கையருக்கு முதல் முதல் ஒதுக்கப்பட்ட ஒரே ஸ்தானமான சட்டசபை அங்கத்துவத்தை அளித்தார்கள்.

இலங்கையின் மேற்கு, வடக்கு, கிழக்கு அடங்கிய தமிழ் ஈழத்தை மட்டுமல்ல காலத்திற்குக் காலம் இலங்கையின் பலபாகங்களையும் தமிழன் [illegible] பணத்தையும், [illegible] வடக்குக் கிழக்கு மாகாணம் யாருடையது என்பதையும் நாகவிகாரை அதிபதி கடகத்துகே நந்தராம தேரோ இனியாவது உணர்வார் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணமும் யாப்பா பட்டுவ என்ற திரிப்பு நாமமும்: யாழ்ப்பாணத்தின் பழைய பெயர் நாகதீவு மறுபெயர்கள் கந்தருவநகரம், விஞ்ஞானபுரம், புண்ணியபுரம், மணற்றி என்பனவாகும். கவிவீரராகவன் என்னும் யாழ்பாடி தான் பரிசாகப் பெற்ற இந்நாட்டிற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டான்.

பின்னர் இவனின் வேண்டுகோளின்படிதான் சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் கி.பி. 907ல் இருந்து நல்லூரைத்தலைநகராக்கி யாழ்ப்பாணத்தை ஆளத்தொடங்கினார்கள். உண்மைச் சரித்திரம் இதுதான்.

இப்படிதமிழனின் தொன்மைமிக்க யாழ்ப்பாண நகருக்கு ''யாப்பபட்டுவ'' என்ற சிங்களக் கறையைப் பூசிஅந்தநகரைமாசுபடுத்துவது கூட்டுத்தாபனங்களுக்கோ வேறு தனிப்பட்டவர்களுக்கோ அழகல்ல என்பதை உணர்த்த விரும்புகிறேன்.

## தமிழ் ஈழம்

மேலேகாட்டிய அறிஞர்களின் குறிப்புப்படி புத்தளத்தின் தென்பாலுள்ள உடப்பிலிருந்து கிழக்கிலங்கையிலுள்ள கும்புக்கன் ஆறுஈறாகவுள்ள நிலப்பரப்புத் தமிழ் ஈழம் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதன் விஸ்திரணம் 8400 சதுரமைல்களாகும்(4776000ஏக்கர் நிலம்) தமிழ் ஈழத்தின் கடற்கரையின் நீளம் 493 மைல்களாகும். இதன்படி தமிழ் ஈழத்தை உற்று நோக்கினல் சகல பொருளாதாரவசதியும் கொண்ட நாடு என்பதை எவரும் மறுக்க முடியாது.

இன்று மேலே குறிப்பிட்ட 8400 சதுரமைல் விஸ்தீரணமுள்ள தமிழ்ஈழ மண்தான் தமிழனின் உயிர்நாடி இதை ஒவ்வொரு தமிழனும் மறந்து விடக்கூடாது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் காலத்திற்குக் காலம் படிப்படியாக இந்தத் தமிழ்ஈழ மண்ணை அபகரிப்பதுதான் ஆட்சியாளரின் முழுத்திட்டமாகும்.

அன்று ஐ. தே. கட்சி ஆட்சியாளர்கள் தான் தமிழ் மண்ணை அபகரிக்கும் திட்டத்தின் ஆரம்ப பூசையை தொடக்கி வைத்தவர்கள். சுதந்திரக்கட்சி ஆட்சியாளர்களே எம்மை வைரமான பகையுடன் நசுக்கினார்கள். ஐ.தே.கட்சி ஆட்சியாளர் எம்மை வழுவழுத்த உறவுடன் நசுக்குகிறார்கள். வழுவழுத்த உறவிலும் வைரமான பகை எவ்வளவோ மேலானது என்பது அறிவுடையோர் மொழியாகும்.

1958, 1977 ஆகஸ்ட் கலவரங்களும் இனித்தென்னிலங்கையில் தமிழன் வாழ முடியாதென்பதை உறுதிப்படுத்தி விட்டன. ஆகையால் ஒவ்வொரு தமிழனும் தென்இலங்கையில் வாழும் நோக்கத்தை முற்று முழுதாகக்கைவிட்டு தமிழ் ஈழ எல்லைகளில் வந்து குடியேறித் தமிழ் மண்ணைக் காக்க திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

ஒரு தனிநாடு அமைக்கும் வரைஒருதமிழ்ஈழம் அமைக்கும்வரை இனி ஒரு தமிழனும் ஓய்ப்போவதுமில்லை; உறங்கப்போவதுமில்லை; அவன் தன்னுடைய நாடு காக்க மொழிகாக்க, கலை கலாச்சாரம் பேண புறப்பட்டுவிட்டான்; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தன்னுடைய மூதாதையர்களால் ஆளப்பட்டுவந்த தமிழ்ஈழத்தை தன்னைத் தானே ஆளும் சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைப்பது தான் தமிழனின் ஒரே இலட்சியம்.

இந்த இலட்சியம் நிறைவேறும்வரை...

இதந் தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந் திரு இரண்டும் மாறிப்
பழி மிகுந்து இழிவுற்றாலும்
விதந் தரு கோடி இன்னல்
விளைந் தெனை
அழித்திட்டாலும்
சுதந்திர (தமிழ் ஈழ)
தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே.
—என்றான் பாரதி.

உயரட்டும் உதயசூரியன் கொடி, ஒலிக்கட்டும் செந்தமிழ்த் தேசிய கீதம், அரியணையில் ஏறட்டும் அவனியெங்கும் புகழ்பாடும் செந்தமிழ்த்தாய், தமிழ்ஈழம் மலரட்டும்,

வாழ்க தமிழ்
வாழ்க தமிழ் ஈழம்.

உடுப்பிட்டியூர்
**கே. எஸ். சிவலிங்கம்**

# மீண்டும் தமிழ்ஈழ ஆட்சி அமைத்திட

# உயிரையும் தந்து போராடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியமைச்சு கூட்டிய....

—1-ம் பக்கத்தொடர்

பதிலாக திரு. கமகேயும் சில வளாகத் தலைவர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர் திரு. கமகே அவர்கள் முதலில் சிங்களத்திலும், பின்பு ஆங்கிலத்திலும் பேசினார், தமிழிலு இரண்டொரு வார்த்தை பேசுவார் எனக் காத்திருந்த தமிழ் பெற்றோர் இறுதியில் ஏமாற்றமே அடைந்தனர்.

எவ்வளவோ சிரமங்கட்கு மத்தியில் பணமும் செலவு செய்து வந்தும் பயன் ஒன்றும் கிடைக்கவில்லையே? என்று அங்கலாய்த்தனர். தங்களை வழியனுப்பிவைத்த பிள்ளைகட்கு யாது கூறுவது? எனத் திகைத்தனர். ஒரு சிலர், எதிர்க்கட்சித்தலைவரைத் தேடிச் சென்றனர். மறு சாரார் தொங்கிய முகத்துடன் கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு நடையைக்கட்டினர்.

சிங்களமும் தமிழும் இந் நாட்டின் தேசியமொழிகள் எனப் பறைசாற்றும் இலங்கைக் குடியரசின் சமதர்மக் கொள்கை இது தானு? வெறும் பத்திரிகைகள் மூலமும் வானெலி மூலமும் தமிழைத் தேசிய மொழியாக்கி விட்டேன். அது சட்டத்திலும் இடம்பெற்று விட்டது. எனப் பறைசாற்றும் கௌரவ நீதி அமைச்சர் இதற்கு என்ன சொல்லுவார்? என்று பெற்றோர் கேட்கின்றனர்.

## இலவசம்

வேப்பம் கன்று நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்களுக்கு நல்லஇன வேப்பம் கன்றுகளை "யாழ்ப்பாணம்மில்க்வைற்தாபனத்தார் இலவசமாக வழங்குகிறார்கள், தேவையுள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டுபெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

## அமிர் உரை நூல்வடிவில்

புதிய அரசியலமைப்பு விவாதத்தில் கூட்டணி கலந்து கொள்ளாது ஏன் என்பதை விளக்கி எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய நாலரை மணி நேர சொற்பொழிவு இப்போது தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித் தனியே நூல்வடிவில் வந்து விற்பனையாகிறது. தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணி இந்நூல்களை வெளியிட்டுள்ளது.

## 'யாழ்ப்பாண அரசு...!

—1-ம் பக்கத் தொடர்

நிதிப் பட்டத்துக்காக எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையே சில திருத்தங்களுடன் நூலாகவெளிவருகிறது.

தமிழன் தனியாட்சி நடத்தியதற்கு ஆதாரமாக ஒரு நாணயத்தையாவது காட்ட முடியுமா என்று கேட்டவர்களுக்குப் பதில் சொல்லும் முறையில் அகழ்வாராய்வுகள், கல்வெட்டெழுத்துக்கள் ஆகியவற்றின் அசைக்க முடியா ஆதாரத்துடன் 'யாழ்ப்பாணஅரசு' எனும் நூல் வெளிவருகிறது.


நண்பர்கள் தேவையா



தோழர் - தோழியர்களின் விலாசங்களும், படங்களுடன் நட்புறவு விபரங்களடங்கிய தொகுப்புப் பிரதியை தபாலில் பெற்றுக் கொள்ளவிண்ணப்பியுங்கள்.

Chandrodaya Penpals Bulletin
Janatha Book Depot.
Borella, Colombo-8




சம்பூரண சலவைக்கு
மில்க்வைற் நீல சோப்
வாங்கி உபயோகியுங்கள்.
ஒரு கட்டியின் விலை 60சதம் மட்டுமே.
மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.



சுதந்திரன் சந்தா

ஓராண்டு சந்தா ரூபா 50-00
அரையாண்டு ,, ரூபா 25-00



செல்லமகால் 3-வது வாரம்

ஜெமினி கணேசன், தேவிகா,
முத்துராமன், ரங்கராவ் நடித்த -

வாழ்க்கைப் படகு

(புத்தம் புதிய கொப்பி)

கடைசி வாரம்
கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
- நடித்த -

தாய்க்குத் தலைமகன்

கிங்ஸ்லி (கொழும்பு) கடைசி வாரம்

சிவகுமார். ஜெயசித்திரா நடித்த-

பொண்ணுக்கு தங்க மனசு
[புதிய பிரதி]

கெப்பிட்டல் 3-வது வாரம்

சிவாஜி சாவித்திரி
நடித்த —

காத்தவராயன்
(புதிய பிரதி)

விஜயா (மட்டுநகர்) கடைசி வாரம்

சிவாஜி நடித்த —

உத்தமன்

— கலர் —

லிடோ (யாழ்நகர்) 5-வது வாரம்

- எம். ஜி. ஆர். நடித்த -

தாய்க்குத் தலைமகன்

(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.